# Évaluation de lecture en tamoul



NOM :
Prénom :

Classe : Date :

## I - இக்கதையைப் படிக்கவும்

### ஒரு குறும்புக்கார நிலவு

ஒரு சிறுவனும், சிறுமியும் தங்கள் வீட்டின் முன் பந்து விளையாடிக் கொண்டிருக்கின்றனர். பந்தை எறிய வேண்டியது யாருடைய முறை?

- எனது!

- இல்லை, எனது!

வாக்குவாதம் ஒன்று ஏற்பட்டு, பின் சிவப்பும், நீலமுமான பந்து பறந்து போகத் துவங்குகிறது...

அது மேலே மற்றும் உயரத்தில் மரங்களுக்கு மேல், நிலவு வரை பறந்து செல்கிறது. பின் அது நிலவைத் தாக்கி, அதைக் கீழே தள்ளி விடுகிறது!

நிலவு பூமியில் விழுந்து, பந்துடன் சேர்ந்து, குதித்தோடுகிறது!

நல்லது! இப்பொழுது இரண்டு பந்துகள் உள்ளன. சிறுவனுக்கு ஒன்றும், சிறுமிக்கு ஒன்றுமாய்.

Procédure : ...............

## II - சரியான படத்துடன் வார்த்தையை தொடர்பு படுத்தவும்





வீடு    பந்து    சிறுவன்

மரம்    சிறுமி    நிலவு





......... /5

## III - ஒவ்வொரு கேள்விக்கும் சரியான விடையை வட்டமிட்டுக் காட்டவும்



குழந்தைகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

அவர்கள் பாடுகிறார்கள்

அவர்கள் விளையாடுகிறார்கள்

அவர்கள் வேலை செய்கிறார்கள்

① அவர்கள் எங்கு விளையாடுகிறார்கள்?

அவர்கள் வீட்டில்

பள்ளிக்கூட விளையாட்டு மைதானத்தில்

அவர்கள் வீட்டின் முன்புறத்தில்

...... /3 + ...... /3 = ...... /6

② பந்தின் நிறமென்ன?

சிவப்பு

சிவப்பு மற்றும் நீலம்

சிவப்பு மற்றும் வெள்ளை

③ கதையின் முடிவில் இரண்டு பந்துகள் ஏன் உள்ளன?

ஏனெனில் இரண்டாவது பந்து ஒன்றை குழந்தைகள் வீட்டில் க

ஏனெனில் சூரியன் வானிலிருந்து விழுந்து விட்டது

ஏனெனில் நிலவு வானிலிருந்து விழுந்து விட்டது

④ கதை எவ்வாறு முடிகிறது?

குழந்தைகள் சமாதானமாகி விட்டனர்

குழந்தைகள் தொடர்ந்து வாக்குவாதம் செய்கின்றனர்

குழந்தைகள் பந்து வைத்துக் கொண்டு தொடர்ந்து விளையாட

⑤ இந்தக் கதை உண்மையிலேயே நடக்குமென நீங்கள் நினைக்கி


ஆமாம்

இல்லை

எனக்குத் தெரியாது.

...... /3 + ...... /3 + ...... /3 = ...... /9

## DOCUMENT 1




### *ஃப்ரெஞ்ச் மொழி, உலகம் முழுவதும்*

நமது கிரகம் 200-க்கும் மேற்பட்ட நாடுகளில் வாழும் 600 கோடி உயிரினங்களுக்கு இல்லமாக விளங்குகிறது. இந்நாடுகளில் வாழ்பவர்கள், பல வகை வித்தியாசமான மொழிகளைப் பேசுகின்றனர். பல நூற்றுக்கணக்கான மொழிகள் இருப்பினும், அவற்றில் சில, சில ஆயிரம் மக்களால் மட்டுமே பேசப்படுகின்றன. சர்வதேச வர்த்தகத்தில் ஆங்கில மொழி பெரிதும் உபயோகிக்கப்பட்டாலும் பெரும்பாலான மக்களால் பேசப்படுவது சீன மொழியே ஆகும். உலகம் முழுவதும் 200 மில்லியனுக்கும் (20 கோடிக்கும்) அதிகமானோர் ஃப்ரெஞ்ச் மொழியை தினசரி வாழ்க்கையில் உபயோகிக்கின்றனர். 6,00,00,000 கோடி பேர் ஃபிரான்ஸ் நாட்டிலும் பெல்ஜியம், ஸ்விட்சர்லாந்து, கனடா மற்றும் சில ஆப்பிரிக்க நாடுகளில் பிறரும் ஃப்ரெஞ்ச் மொழி பேசுகின்றனர்.

### *ஃப்ரெஞ்ச் பள்ளி*

ஃபிரான்ஸில், 16 வயது வரை கட்டாயக் கல்வி முறை நடப்பில் உள்ளது. ஆரம்பப் பள்ளிகளில் படிப்பைத் துவங்கும் குழந்தைகள், பின் *கல்லூரி* இறுதியாக *லை சீ* சென்று படிக்கின்றனர். ஆறு வயதிற்கும் உட்பட்ட குழந்தைகள், கிண்டர்கார்டனில் படிக்கின்றனர். ஆனால் இது கட்டாயமானதல்ல. எனினும் இது ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்ப குழந்தைகளைத் தயார் செய்வதால், கிண்டர்கார்டனில் குழந்தைகளைச் சேர்க்குமாறு, பெற்றோர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். வாலிப வயதிற்குத் தேவையான அடிப்படைத் திறமைகளை ஆரம்பப் பள்ளிகளில் குழந்தைகள் பெறுகின்றனர். படித்தல் எழுதுதல், மற்றும் கணிதம் மட்டுமல்லாமல் ஒரு அந்நிய நாட்டு மொழி கம்ப்யூட்டர் திறமைகள் மற்றும் பல்வேறு விஷயங்களை. எனவே, சரியான நல்ல வருகை மற்றும் நேரந்தவறாமை போன்றவை குழந்தைகளிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. ஒரு குழந்தை, வகுப்புக்களுக்கு செல்லத் தவறினால், அவனோ/அவளோ, தங்களது பெற்றோர்களிடமிருந்து விடுமுறைக் கடிதம் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

ஒவ்வொரு பள்ளியிலும், ஐந்து போதிக்கும் நிலைகளை ஒட்டி, ஐந்து தர வரிசைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. எட்டு வயது நிரம்பிய சிறுவர்களுக்கான வகுப்பு கால அட்டவணை, உதாரணமாக கீழே தரப்பட்டுள்ளது:

| | கிங்கள் | செவ்வாய் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|
| 08-30 | *ஃப்ரெஞ்ச்* | *ஃப்ரெஞ்ச்* | *ஃப்ரெஞ்ச்* | *ஃப்ரெஞ்ச்* |
| | *கணிதம்* | *கணிதம்* | *கணிதம்* | *கணிதம்* |
| 10-00<br>10-20 | *இடைவேளை* | | | |
| | *கணிதம்* | *கணிதம்* | *கணிதம்* | *கணிதம்* |
| | *கணிதம்* | *கணிதம்* | | |
| 11-30<br>01-30 | *மதிய உணவு இடைவேளை* | | | |
| | *கணிதம்* | *அறிவியல்* | *அறிவியல்* | *வரலாறு* |
| | *புவியியல்* | *IT* | *நீச்சல்* | *படித்தல்* |
| 03-00<br>03-20 | *இடைவேளை* | | | *இடைவேளை* |
| 04,30 | *பாடல்* | *ப்ளாஸ்டிக் கலைகள்* | *கவிதை* | *உடறபயறசக கல்வி* |

உபகரணங்கள் மற்றும் உடைகள்: *நீச்சல்:* நீச்சல் உடை, நீச்சல் குல்லாய், டவல் (துவாலை)
*உடற்பயிற்சிக் கல்வி:* சிறிய கால்சட்டை, ஸ்நீக்கர்கள் அல்லது உடற்பயிற்சி காலணிகள் (ஷூ), டி. ஷர்ட்டுகள்
*பள்ளிச் சிற்றுண்டிச் சாலையில் உணவு :* டவல் (துவாலை) மற்றும் டூத் பிரஷ் எடுத்து வரவும்.

## கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சரியான விடைகளை வட்டமிட்டுக் காட்டவும்

① உலகின் பெரும்பாலான மக்களால் என்ன மொழி பேசப்படுகிறது?

ஃப்ரெஞ்ச்

ஆங்கிலம்

சீனமொழி

② ஃப்ரெஞ்ச் மொழி ஃப்ரான்ஸில் மட்டும்தான் பேசப்படுகிறதா?

ஆமாம்

இல்லை

③ ஃப்ரான்ஸ் நாட்டில் 4-வயது குழந்தை பள்ளி செல்வது கட்டாயமா?

ஆமாம்

இல்லை

...... /2 + ...... /2 + ...... /2 = ...... /6

④ கால அட்டவணையைப் படியுங்கள் : ஒவ்வொரு இடைவேளையும் எவ்வளவ

40 நிமிடங்கள்

30 நிமிடங்கள்

20 நிமிடங்கள்

⑤ வாரத்தின் எந்த நாளில், பாடம் படிக்கும் முறை இல்லை?

திங்கள்

செவ்வாய்

வியாழன்

வெள்ளி

⑥ எந்த நாளில் மாணவர்கள் தங்கள் நீச்சல் உடை மற்றும் துவாலை எடுத்து வ

திங்கள்

செவ்வாய்

வியாழன்

வெள்ளி

...... /2 + ...... /2 + ...... /2 = ...... /6

## DOCUMENT 2



### ஒரு மாறுபட்ட வகை பள்ளிக்கூடம்...

அடுத்த நாள் காலை, அந்த இளம் சூனியக்காரி, மாய வித்தை மருந்துகள் பரீட்சை நடக்கவிருக்கும் வகுப்பறைக்குள் நுழைந்தாள். எப்பொழுதும் போலவே, ஒரு வகைப் பதற்றம் காற்றில் நிலவியது. ஏனெனில் திட்டத்திலுள்ள அனைத்து சூத்திரங்களையும் அவள் சரிவர, செம்மையாக திரும்பப் படித்துள்ளாளா? என ஒவ்வொருவரும் சந்தேகித்தனர். எனது அருகிலிருந்த சூனியக்காரிகளிலேயே மிகவும் வயதானவள் மட்டும் சிறிதும் கவலைப்படவில்லை, அவள் எப்பொழுதுமே அனைத்தும் அறிந்திருந்தாள் மற்றும் இத்தகைய சோதனைகளை ஒரு சாதாரண சம்பிரதாயமாகக் கருதினாள். அவள் தனது கையை உயர்த்தினாள்:

- மன்னிக்கவும் மிஸ், எங்களின் வகுப்புக் குறிப்புக்களை நாங்கள் உபயோகிக்க அனுமதி கிடைக்குமா?

- வாருங்கள் மாணவிகளா, விரைந்து வந்து, அமருங்கள்! என்று ஆசிரியை உத்திரவிட்டாள். ஒரு கொப்பரைக்கு ஒருவர் விகிதம். பேச்சே கூடாது! பரீட்சைக்கான விஷயம் இதோ, உங்கள் புத்தகங்களை உபயோகிக்காமல், நீங்கள் ஒரு சிரிப்பு மருந்தை தயாரிக்க வேண்டும். ஏய், நீ, தயவு செய்து உனது புத்தகத்தை உடனடியாக மூடு! மௌனமாக வேலையைத் துவங்குங்கள் முடித்தவுடன், உங்கள் மருந்தை நீங்களே சுவைத்து, அது வேலை செய்கிறதா எனப் பாருங்கள். துவங்குங்கள் இப்பொழுதே!

ஜில் மர்ஃபியின் "Amandine Malabul, The Worst Witch" லிருந்து

<u>கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சரியான விடையை வட்டமிடவும்</u>

① இப்பாடத்தின் ஆசிரியர் யார்?

*Amandine Malabul* *Jill Murphy* *ஆசிரியை*

② இவ் வகுப்பை பிற வகுப்புகளிலிருந்து எது வேறுபடுத்துகிறது?

- *மாணவர்கள் மிகவும் இளமையாக உள்ளனர்*
- *ஆசிரியை மிகவும் கண்டிப்பானவர்*
- *மாணவர்கள் அனைவரும் சூனியக்காரிகள்*

③ பரீட்சையின் பொழுது ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ள மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனரா?

*ஆமாம்* *இல்லை* *ஓரளவு*

④ பரீட்சையில் அந்த மாணவன் தேறிவிட்டானா (பெண் பாலினம்) என்பதை ஆசிரியர் எவ்வாறு சோதிப்பார்?

- *மாணவன் சிரிக்கத் துவங்குகிறான்*
- *மாணவன் அமைதியாக இருக்கிறான்*
- *மாணவன் பேசத் துவங்குகிறான்*

...... /2 + ...... /2 + ...... /2 +...... /2 = ...... /8